**OPEN ACCESS**

Volume: 13

Special Issue: 2

Month: February

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
ஆ.விஜயராணிமுனைவர். ‘ம.இலெ. தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டு.” *Shanlax International Journal of Arts, Science and Humanities*, vol. 13, no. S2, 2026, pp. 181–85.

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS2-Feb.10209

# ம.இலெ. தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டு

**முனைவர் ஆ.விஜயராணி**
*தமிழ்த்துறைப் பேராசிரியர்*
*தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி*

## அறிமுகவுரை

கவிதை - கவிஞனின் கருத்து அலைகளின் மோதல் என்றும், பாட்டு-பாவலர்களின் எண்ண அலைகளின் உயர்வு, அறிவின்திறன், உள்ளக்குமுறல் என்றும் எல்லோராலும் கூறப்படும். இத்தகைய உருவாக்கத்தில் கிடைத்த இலக்கியமாகத்தான் தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

## ஆந்தைப்பாட்டு- அறிமுகம்

தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர். தனித்தமிழ்ப் பாவலர். இயற்கையைப் போற்றிப்பாடும் பாவாணர். ஆங்கிலம் கலக்காத தமிழ்ச் சொற்களை வழக்கத்தில் இயல்பாகவே கையாளக் கூடியவர்தான் ஆந்தைப்பாட்டின் ஆசிரியர் ம.இலெ. தங்கப்பா. இவரின் ஆந்தைப்பாட்டு பாரதியாரின் குயில்பாட்டைப் போன்ற ஒரு கற்பனையே இக்கதையாகும். ஆசிரியரே போலச் செய்தல் என்ற அடிப்படையில் இப்பாட்டைப் பாடியதாகக் குறிப்பிடுவது உணரத்தக்கது.

இப்பாட்டு 1955-ஆம் ஆண்டு பாடியதாகவும் 1958-ம் ஆண்டு கோவிந்தன் வெளியிட்ட வானம்பாடி இதழில் முதன்முதலில் வெளிவந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பின் 1964-இல் தென்மொழி என்ற இதழில் தொடர்பாட்டாக வந்ததாகக் குறிக்கப்படுகின்றது. ஆந்தைப்பாட்டு தனது இளமைக்கால முயற்சி என்றும், தனது 21- ஆம் வயதில் இப்பாட்டு எழுதப்பெற்றதாகவும் கவிஞர் கூறும் கருத்து அறியத்தக்கது.

ஆந்தைப்பாட்டு இயற்கை அன்புச்சூழலையே உருவாக்குகின்றது. உலகின் தீமைகளையும் போலித்தனங்களையும் கண்டு குமுறிய என் இளமைக்கால நெஞ்சத்தின் கொதிப்பையும்; எனது பிற்கால வளர்ச்சிக்கானஅடிப்படையினையும் இப்பாட்டில் காணமுடிகின்றது என்று ஆசிரியரே கூறுவதும் எண்ணத்தக்கது. கதைச்சுருக்கம்

சமூகத்தில் நடக்கும் தவறுகளைக் கண்டு பொறுக்காத கவிஞர்; எங்கோ நடந்து கொண்டிருக்க ஒரு சுடுகாட்டில் நெல்லி மரத்தில் இருந்து சோகப்பாட்டு பாடும் ஆந்தையைக் கவனிக்கின்றார். அதுவும் தன்னைப்போலவே சமூகத்தில் நடக்கும், மானிடர்கள் அனைவரும் செய்யும் அத்துனைத் தவறுகளும் கண்டு பொறுக்காமல் சோக கீதம் பாடுவதைக் கேட்டு விளக்குகின்றார்.

கவிஞர் ஆந்தையின் அருகே செல்ல அவரை மதிக்காது கோபமுடன் சென்று விடுகின்றது. கவிஞர் வருத்தத்துடன் சென்றாலும்

அவருக்கு உறக்கம் இல்லை. மறுநாளும் சுடுகாட்டிற்கு வருகின்றார். ஆந்தை அவரை மீண்டும் பார்த்துக் கோபப்படுகின்றது. ஆந்தையிடம் தான் கூற வருவதைக் கேட்க வைக்கின்றார். பின், ஆந்தை தன் கோபம் தணிகின்றது. சமூகத்தில் சில நல்ல மனிதர்களும் இருக்கின்றார்கள் என்பதைக் கவிஞர் கூறியதைக் கேட்டு அவரோடு பேசுகின்றது. கவிஞரும் அதனிடம் நன்கு பேசிவருகின்றார். பின்னரே ஆந்தையின் சோகத்திற்கான காரணத்தை கேட்கின்றார். அது தன் வரலாற்றைக் கூறுகின்றது.

தான் அழகற்ற பெண்ணாக இருந்ததால் திருமணம் தடைபடுகின்றது. அதனால் தாய் தந்தையின் மனம் வருந்தாது இருக்க அப்போது திருமணத்தைத் தவிர தன்னை சமூகச் சேவையில் தொண்டு வாழ்க்கையில் தன்மனத்தைச் செலுத்தி வாழ முற்படுகிறாள். அப்போது ஒரு காமக் கொடூரனால் தான் சீரழிக்கப்பட்டு, இறுதியில் தற்கொலை செய்து கொண்டேன் எனக் கூறுகிறாள். அந்தப் பெண் நான் தான். இந்தப் பிறவியில் நான் ஆந்தையாக உள்ளேன் என்று கூறி முடிக்கின்றது.

கவிஞர் சமூகத்தொண்டில் ஆந்தையைத் தன்னுடன் சேர்ந்து பணியாற்ற அழைக்கின்றார். பின் அது கவிஞர் தோளைத் தழுவ அப்போது அதிசயம் நிகழ்கின்றது. கவிஞர் முன்பாக ஆந்தை பெண்ணாக நிற்கின்றது. இதனைக் கவிஞர் கனவா? கற்பனையா? மயக்கமா? என்று குழம்புகின்றார். பின்னர் ஆந்தையே தன்நிலையைக் கூறி மீண்டும் பறந்து விடுகின்றது. கவிஞர் சுயநினைவின்றிப் இருட்டிலே மண்ணில் படுத்து மகிழ்கிறார். இதனைக் கண்விழித்தப் பிறகே உணர்கின்றார். தன் கண் எதிரே கல்லறை, சுடுகாடு, மரம் இருக்கின்றது. மற்றவை கனவு என்பதை உணர்ந்து கதையை முடிக்கின்றார்.

**நூல்பெயர்**

ஒரு கவிஞன் தன்னுடைய உயர்ந்த கவிதைப் படைப்புகளின் மூலமே காலத்தைக் கடந்து வாழ்கிறான். கடவுள் இன்ப துன்பங்களைக் கடந்தவர். கவிஞனும் உலக வாழ்வின் இன்ப துன்பங்களைக் கடந்து நின்று தன் கற்பனை வளத்தால் காவியம் படைக்கிறான். அவ்வகையாய் படைக்கப்பட்ட நூல்தாம் தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டும். இந்த நூல் பறவையின் பெயரைக்கொண்டு படைக்கப்பட்ட ஒன்று. இதில் கவிஞன் கூற்றாகவும் அவரது கற்பனையும் நூலில் பொருந்திவரக் காணமுடிகின்றது.

**ஆந்தைப்பாட்டு – வருணனைத் திறன்**

ஆந்தைப்பாட்டு மாலைநேர வருணனையோடு தொடங்குகின்றது. அதனை,

**“மாலைக் கதிரோன் மருங்கில் வரக்கண்டு**
**மேலை அடிவானம் நாணிமுகம் சிவக்கும்....”** *(1-2)*

எனத் தொடங்குகின்றது. இதில் மாலைநேரத்தில் சூரியன் மேற்குப்பகுதியில் மறையும் தன்மையை நாணிமுகம் சிவப்பதாக வர்ணனை செய்யப்படுகின்றது. இதில் அதிகமான இயற்கை வர்ணனைகள் நிறைந்த நூலாக அமைந்து காணப்படும் அளவிற்குப் பல சிறப்புகள் நிறைந்துள்ளமை உணரத்தக்கது.

**கருத்துநிலை**

ஆந்தைப்பாட்டு ஒரு கற்பனைக் கதை என்று ஆசிரியரே கூறும் கூற்று. இது நடையிலும் அமைப்பிலும் பாரதியாரின் குயில்பாட்டைப் பின்பற்றினாலும், கருத்திலும் கற்பனையிலும் இருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. அவரே குயில்பாட்டுக்கு மறுதலையானதொரு போக்கில் எழுதிப்பார்க்க வேண்டும் என்ற இளமைத் துடுக்கிலேயே இப்பாடல் எழுந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இப்பாட்டினைப் பற்றிக் கவிஞர் தங்கப்பா கூறும்போது ‘உண்மையான பாவலன் எவனும் வாழ்க்கைச் சிக்கல்களில் இருந்து தப்பித்துக் கொள்பவன் அல்லன். வாழ்க்கைச் சிக்கல்களுக்கு விடைகாண்பதே அவன் பணியாகும். மக்களின் நேயத்தை உருவாக்குவதுதான் பாவலனின் வேலை. மாந்தனை நல்லவனாக உருவாக்குதல் வேண்டும். மக்கள் நேயத்திற்கு அடிப்படை மனத்தின் இரக்கம், நெகிழ்ச்சி எல்லாவற்றின் மேலும் அமையும் இயற்கை அளவு. இந்நேயத்தை ஊனில். உணர்வில், உயிரில் கலந்து ஊறியிருப்பவன் எதைப்பற்றியும் பாடலாம்சு எனக் குறிப்பிடுகின்றார்.

உலகில் நிகழும் தீமைகளையும் போலித்தனங்களையும் கண்டு குமுறிய என் இளமைக் கால நெஞ்சின் கொதிப்பே இப்பாட்டு என்பதை உணரச் செய்கின்றார். கருத்து நிலையில் காதல் கவிதையாக இருந்தாலும் கருத்தை எடுத்துக்கூறும் விதத்தில் ஆந்தைப்பாட்டில் காதல் இருந்தாலும் சமூக அநீதிகளின் பட்டியலிட்டு அதில் இருந்து மீண்டு வந்து நல்ல செயல் ஆற்ற வேண்டும் என்பதையே அறிவுறுத்துகின்றார்.

### பாவடிவ நிலை

ஆந்தைப்பாட்டு 1034 அடிகளைக் கொண்ட கலிவெண்பாவால் ஆனது. இரண்டடி ஒரெதுகை என்ற ஒழுங்கில் மட்டும் அமைந்தள்ளது. ஆந்தை தானே பாடுவதாக வரும் இடத்தில் மட்டும் “தனனா தன தனனா’ என்ற பண்பியல் சார்ந்த சந்தத்தில் பாடல்கள் கண்ணிகள் கொண்டு ஆந்தைப் பாடுவதாக அமைந்துள்ளது.

இருப்பினும் இந்நூல் அடி அளவு பெற்ற தொடர்நிலைச் செய்யுள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கற்பனைத் திறன்

குயிலின் குரல் செவிக்கு இனியது. அதனை சுவைத்து மகிழ்வது நன்றே. அதனால் ஆந்தைக்குரல் இனிமையற்றது என்றோ ஆந்தை அழகற்றது என்றோ ஒதுக்கத் தேவையில்லை. அன்போடும் நுண்ணுணர்வோடும் நோக்கினால் அதனையும் சுவைக்கலாம் என்று கவிஞர் குறிப்பிடுகின்றார். மாஞ்சோலைகள், பூஞ்சோலைகள் மட்டுமல்ல சுடுகாடுகளும். இடுகாடுகளும் கூட எவ்வளவோ மெய்மைகளை நமக்கு உணர்த்துவன என்று கூற வருகின்றார். ஒவ்வொருவரும் இயற்கை ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அப்பாட்டின் வழி அறிவுறுத்த வருகின்றார்.

உலகிற்குத் தேவையானது மாந்த நேயத்தில் கனிந்து நிற்கும் அன்பு உள்ளம் ஒன்றுதான். அதுதான் வாழ்க்கையைத் திருத்துவது, ஒழுங்குபடுத்துவது, இலக்கியத்தைப் பொருளுடையதாக்குவதும் அதுவே என்று குறிப்பிடுகின்றார்.

இயற்கையைப் பாடும் பாவலன். இந்த அன்பை, இந்த ஒழுங்குணர்வை மாந்தன் உள்ளத்தில் ஏற்படுத்தவே பாடுகின்றான். எல்லாவகைச் சீர்த்திருத்தங்களும் புரட்சிகளுக்கும் ஒழுங்கே அடிப்படையாக இருத்தல் வேண்டும். அரைகுறை ஒழுங்குகள் அரைகுறைப் புரட்சிகளையே உருவாக்கும். எத்தகைய முரண்பாடும் அற்ற முழுமையான ஒழுங்கு ஒன்றே முழுமையான புரட்சி. இந்த முழுமையான ஒழுங்குணர்வை இயற்கையன்பைத் தவிர வேறு எதுவும் உண்டாக்காது. இயற்கை நுட்பம் உணர்ந்தவன்தான் ஒழுங்கின் நுட்பத்தை உணரமுடியும். ஒழுங்கின் நுட்பம் உணர்ந்தவன் தன் மக்களைப்போல் ஒழுங்கொடு கூடிய மலர்ச்சிக்குத் துணைநிற்க முடியும் என்கின்றார்.

இயற்கையன்பு அழகென்றும் அழகற்றதென்றும் பகுத்துக் காண்பதில்லை. உயர்ந்ததென்றும், தாழ்ந்ததென்றும் வேறுபடுத்தவதில்லை. ஒழுங்கு பிறழாத நிலையில் அதனதன் உண்மையை உணர்ந்து மக்கள் வாழ்க்கைக்கு அது பயன்படச் செய்கின்றது. ஆந்தைப்பாட்டும் இத்தகைய இயற்கை அன்புச் சூழலையே உருவாக்குகின்றது என்று கூறும் கருத்து ஒப்பு நோக்கத்தக்கது.

இயற்கையைத் தன் கற்பனைக்குரிய கவிதையாகப் படைத்துத் தந்திருப்பது ஆந்தைப்பாட்டின் சிறப்பாக அமைகின்றது. இவ்வாறு தங்கப்பா தனது கனவாகிய வெறுங்கற்பனையைத் தனது பாட்டிற்குக் கருவாகக் கொண்டு பாடல் படைத்திருப்பதை அறியமுடிகின்றது.

ஒரு கவிஞனின் கவிதை சிறப்பு பெறுகின்றது. என்றால் அது அவன் கூறும் உணர்ச்சியின் வழியாகவே ஆகும். அவ்வுணர்ச்சியின் வழியாகத்தான் தான் கூறவரும் கருத்தை கவிஞன் உவமை, உருவகம், கற்பனை என்கின்ற கூறுகளின் வழியாக வர்ணனை செய்து இலக்கியத்தைச் செம்மைப் படுத்துகின்றான். இவ்வகையில் ஆந்தைப்பாட்டில் மிகுதியான உவமை உருவகங்களின் வழியாகக் கனவு என்ற கற்பனை கதை புனையப்பட்டுள்ளமை அறிதற்குரியது.

### உளவியல் பார்வை

பிராய்டின் உளவியல் பகுப்பாய்வு நோக்கில் ஆந்தைப்பாட்டை அணுகிப் புதியதொரு உட்பொருளைநம்கண்முன்னேகொணர்ந்துள்ளார். ஆந்தைப்பாட்டில் சமுதாயக்கொடுமைகளைச் சார்ந்த நிறைவேறாத ஆசைகள், காதல் மயக்கம் ஆகியனவும் வருணனை செய்யப்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

அதில் ஆந்தை தனது முற்பிறப்புக் கதையினைக் கவிஞரிடம் கூறும்போது அதில் தனக்கு நேர்ந்த நிறைவேறாத திருமண வாழ்க்கை, சமூகக் கொடுமைகள் ஆகியன கதையாக அமைக்கப்படுகின்றது. இதனால் ஆந்தை, சமூகத்தில் உள்ள மானிடர்களை வெறுப்பதும் பின் தன்மீது இரக்கம் கொண்டு தன்னைப்போல் உலகைப் பார்த்து வெறுக்கும் கவிஞருடன் நட்பாகின்ற தன்மையும் புனையப்படுகின்றது.

இந்த நிலையில் கவிஞரின்காதல் ஆந்தைக்கு நிகழ்ந்த சமூகக் கொடுமைகள் ஆகியன ஒரே தன்மையில் அமைந்து ஒன்றுபடுகின்றனர். இதனை ஆந்தை பாடும் சோகப்பாட்டின் வழி கவிஞர் புலப்படுத்துகின்றார். இதனை,

***"பொய்மை தனில் வளர்வார் - வெறும்***<br>***போலிக் குளம் தளர்வார்***<br>***மெய்மை எனில் வெருள்வார் - அயர்***<br>***மிகை கண்டு உயிர் சோர்ந்தேன்***<br>***அறமும் நினைகில்லார் - விரிவு***<br>***அன்பும் உளம் கொள்ளார்***<br>***மறமே புரிகின்றார் - உயிர்***<br>***மூழ்கித் தவிக்கின்றேன்"***

என்று வரும் பாடல்வழி உணரமுடிகின்றது. மேலும்,

***"சீச்சீ போ மாந்தனே, சின்னக் குலத்தவன் நீ***<br>***பேச்சென்ன உன்னிடத்தில்? என்று முனிந்ததுவே"***

என்ற பாடல் ஆந்தையின் கோப வெளிப்பாட்டினைக் கவிஞர் அழகாக வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு ஆந்தைப்பாட்டில் கவிஞரின் காதல் ஏக்கமும், ஆந்தையாகிய பெண்ணுக்கு நிகழ்ந்த சமூகக் கொடுமைகள் காரணமாக இருந்ததால் மானிடர்களை வெறுத்துப் பேசும் பறவையாகக் காட்டப்படுவது போல கவிஞரின் கற்பனை உணர்ச்சியைச் சுட்டுகின்றது எனலாம். ஆந்தைப்பாட்டில் சமூக மக்கள் தனது தீயசெயல்களில் மூழ்கிடாமல் நல்ல மனிதநேயம், மிக்கஇரக்கம், இயற்கையைப் போற்றல், நற்செயலாற்றல் என்கிற பண்புகளைப் பெற வேண்டும் என்பதை ஆந்தையின் வாயிலாகக் கவிஞர் உணர்த்தும் பாங்கு குறிப்பிடத்தக்கது.

ஆந்தைப்பாட்டில் ஆந்தை என்ற பறவையின் மீது கவிஞர் நட்பு கொள்ள விரும்புகின்றார். பின்னர் அது பெண்ணாக உருவம் மாறும்போது அதனை அரவணைத்துக் கொள்கின்றார். இதனை,

***"ஆந்தையே நில்லாய் என் அன்பை கிளர்வித்தாய்***<br>***சேர்ந்து பணி செய்யாமல் செல்ல நினைப்பதென்ன?***<br>***உன்னைநான் கண்டதுமே உள்ளத்தில் நட்புணர்ச்சி***<br>***முன்னிவரக் கண்டேன்; முழுதாய் உனைவிழைந்தேன்***<br>***என்று நெகிழ்ந்துரைத்தேன் ஏக்கமுற்று நின்றுவிட்டேன்***<br>***துன்றுமந்தப் புள்வந்தென் தோளைத் தழவியதே"***

என்று கவிஞர் குறிப்பிடுகின்றார். மீண்டும் அவர் தன் முன்னே மயில் போன்ற மங்கை நிற்பது கண்டு அதனை அனைத்துக் கொள்ள தொடங்கினேன். அப்போது நிகழ்ந்த வியப்பினை என்னவென்று சொல்வதெனப் பாடுகின்றார். இதனை,

***"ஆந்தையை நான் காணவில்லை; அன்பின் ஒளிவிழிகள்***<br>***நீந்தி அலைபாயும் நேரிழையை முன்கண்டேன்!***<br>***நங்கைமுகத்தில்எழில் நான்கானேன் என்றாலும்***<br>***மங்காத உள்ளழகு மாட்சியங்குக் கண்டேன்,***<br>***சொல்லடங்கா அன்புணர்வால் தோகையைநான் தோளொடு***<br>***மெல்ல அணைக்கலுற்றேன்; விந்தையினை என்சொல்வேன்!***<br>***கால்குல் மயக்கமா? கற்பனையா? பொய்க்கனவா?***<br>***மங்கையைக் காணேன் மறுபடியும் ஆந்தையே***<br>***கண்டேன்; குழம்பினேன்; காரணங்கட் கெட்டாமல்***<br>***உண்டான சூழ்ச்சியஃது ஒன்றும் விளங்கவில்லை"***

என்று பாடும் கவிதைகள் வழி கவிஞரின் நட்பாகிய. காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுவது அறியப்படுகின்றது. இதில் கனவு கலைய தன் தடுமாற்றத்திற்கான காரணம் புரியாது நின்றிருக்க, பின், கவிஞர்முன் தோன்றி ஆந்தையைப் பார்த்து நில்! ஏன் உள்ளத்தில் அன்பை மிகுவித்தாய்! என்னுடன் சேர்ந்து தொண்டு செய்யாமல் போக நினைப்பது ஏன்? உன்னை நான் பார்த்த போதே என் உள்ளத்தில் நட்புணர்வு கிளர்ந்து எழுவதை உணர்ந்தேன். முழுவதுமாக உன்னை நான் விரும்பினேன் என்று மனங்குழைந்து அதனிடம் கூறினேன் என்றும்; மனம் ஏக்கமடைந்து அப்படியே நின்றுவிட்டேன். ஏன்னை நோக்கி நெருங்கிப் பறந்து வந்த அந்தப்பறவை என் தோளை வந்து தழுவிக் கொண்டது எனக் கவிஞர் கூறும் காதல் உணர்வுகள் ஆந்தைப்பாட்டில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இறுதியில், ஆந்தை கவிஞரிடம் நான் உங்கள் உள்ளத்தை அறிந்து கொள்வதற்காகவே பெண்ணாக மாறினேன். அப்படி மீண்டும் இளம்பெண்ணாக மாறி மண்ணுலக வாழ்வில் மகிழ வேண்டும் என்று நான்விரும்பவில்லை.

நான் பெரும்பேறாகக் கருதிப் பெற்றுக்கொண்ட பெருமையான பறவை உருவத்தை இனி நீக்கிக் கொள்ள மாட்டேன். என்னுடைய அன்பு ஒன்றே உங்களுக்குப் போதும்; அந்த அன்பிலேயே நிலைத்திருந்து வாழுங்கள் என்று சொல்லி விட்டு, தான் பேசுவதற்கு வாயைத் திறப்பதற்குள் தன் சிறகுகளை விரித்துத் தாவித் தாழ்வாக அந்தப் பறவை பறந்து போய் விட்டது என்று கவிஞர் தன் கவிதையில் குறிப்பிடுவது அவரின் உணர்வு சார்ந்த காதலின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவது உணரத்தக்கது.

இறுதியில் ஒருவிதக் காதல், அன்பு என்ற ஏக்கத்தில் கவிஞர்அன்பே இல்லாத இந்த வாழ்க்கையில் கிடைத்த ஒரு ஒப்பற்ற நட்பும் கைநழுவிப் போய் விட்டதே என்ற வருத்தத்தில் மண்ணில் தொப்பென்று வீழ்ந்தேன் என்பதை,

**“ஆவி தளர்வுற்றேன், அன்பில்லா இவ்வாழ்வில்**
**மேவியதோர் நட்பும் மிகநழுவிப் போனதென்றே**
**துன்பத்தால் மண்மீதில் தொப்பென்று வீழ்ந்தேன் நான்”**

என்று குறிப்பிடும் கவிதை வரிகள் வழி உணரமுடிகின்றது.

இவ்வாறு ஆந்தைப்பாட்டு அன்பிற்கு ஏங்கும் கவிஞனின் உள்ளம் புலப்படுத்தப்படுவது உணரத்தக்கது. இந்நிலையில் காதல் பற்றிய உவமைகளைப் பேசுவதில் ஆந்தைப்பாட்டு சிறப்பு பெறும் விதம் அறியத்தக்கது.

## தொகுப்புரை

ம.லெ.தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டு என்ற கட்டுரை வழி பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு தொகுத்துத் தரப்படுகின்றன. ஆந்தைப்பாட்டு தாந்தேயின் கவிதைபோன்று பலபொருள் தன்மையினைக் கொண்டது என்பது பெறப்படுகின்றது.

இது ஒவ்வொரு பருவத்தினர்க்கும் ஒவ்வொரு பொருளைப் புகட்டக் கூடியதாக உள்ளது என்பது பெறப்படுகின்றது.

சமூகத்தில் நடக்கும் அவலங்கள். சீர்கேடுகள். முறைகேடுகள் இவற்றில் கொதித்துப்போன ஆசிரியர் உள்ளக்கிடக்கை ஆந்தையின் வாயிலாக வெளிப்படுத்தித் தான் அதன்மேல் அன்பு காட்டும் தோழனாக மாறும் தன்மையும் புனையப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஆந்தையின் மீது கொண்ட இரக்கம் நட்பாகி அதன் மீது அன்பு கொள்ளும் கவிஞராக மாறுகின்றது. இவ்வகையில் ஆந்தைப்பாட்டில் சமூக அவலங்கள் மாறும் வகையைத் தன் கனவுக் கவிதையாகப் படைத்திருப்பதை அறியமுடிகின்றது.

## பார்வை நூல்

1. ம.இலெ. தங்கப்பா, ஆந்தைப்பாட்டு, புதுச்சேரி.